# போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

## IV-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

## SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

MAY 16, 1922.

ந. 8.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம௵ மே௴ 16௳. [விலை, 3 பை.


## சென்னைச் சட்டநிரூபண சபையாரின் ஆக்ட்

## ACT OF THE LOCAL LEGISLATURE OF MADRAS.

இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 81-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரித்து, சென்னைச் சட்ட நிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1922-ம௵ மார்ச்௴ 24௳ கவர்னரவர்களாலும் 1922-ம௵ எப்ரல்௴ 26௳ கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது :—

### MADRAS ACT No. VII OF 1922.

### சென்னபட்டணம் 1922-ம௵த்து 7-வது ஆக்ட்.

### AN ACT TO AMEND THE MADRAS CITY MUNICIPAL ACT, 1919.

### 1919ம்-௵த்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டைத் திருத்துவதற்கான ஆக்ட்.

சென்னபட்டணம் 1919-ம௵த்து 4-வது ஆக்ட்.

1919-ம௵த்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. (1) இந்த ஆக்டை 1922-ம௵த்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

(2) 4-வது பிரிவு - 1919-ம௵ அக்டோபர்௴ 1௳ யிலிருந்து செலாவணியாய்க் கொண்டிருப்பதாக எண்ணப்படும்.

(3) இந்த ஆக்டிலே, "பிரதான ஆக்ட்" என்னும் சொற்றொடர் - 1919-ம௵த்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டென்று அர்த்தமாகும்.

4-வது ஷெட்யூலின் 2-ம் பாகத்தைச் சேர்ந்த 7-வது விதியில் திருத்தம்.

2. பிரதான ஆக்ட் 4-வது ஷெட்யூலின் 2-ம் பாகத்தைச் சேர்ந்த 7-வது விதியிற்கண்ட விலக்கு நிபந்தனைக்கு பாதகமில்லாமலே அந்த விதியிற்கண்ட வரி விதநிர்ணயத்துக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

| | தொகை செலுத்தப்பட்ட மூலதனம். லக்ஷச்கணக்கில் ரூபாய். | அரைவருஷ வரி. ரூ. |
|---|---|---|
| A. | இருபதும், இருபதுக்கு மேற்பட்டும் ... ... ... | 1,000 |
| B. | பத்தும், பத்துக்கு மேற்பட்டு இருபதுக்குட்பட்டும் ... ... | 500 |
| C. | ஐந்தும், ஐந்துக்கு மேற்பட்டு பத்துக்குட்பட்டும் ... ... | 250 |
| D. | மூன்றும், மூன்றுக்கு மேற்பட்டு ஐந்துக்குட்பட்டும் ... ... | 150 |
| E. | இரண்டும், இரண்டுக்கு மேற்பட்டு மூன்றுக்குட்பட்டும் ... | 100 |
| F. | ஒன்றும், ஒன்றுக்கு மேற்பட்டு இரண்டுக்குட்பட்டும் ... ... | 50 |
| G. | ஒன்றுக்குட்பட்டு ... ... ... ... ... | 30 |

4-வது ஷெட்யூலின் 3-ம் பாகத்தைச் சேர்ந்த 10-வது விதியின் (a) குறிப்பிட்ட உபவிதியிற்கண்ட அட்டவணையில் திருத்தம்.

3. பிரதான ஆக்ட் 4-வது ஷெட்யூலின் 3-வது பாகத்தைச் சேர்ந்த 10-வது விதியின் (a) குறிப்பிட்ட உபவிதியிற்கண்ட அட்டவணைக்கு பர்த்தியாக அடியிற்கண்ட அட்டவணையை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

| | அரைவருஷத் தவணைத் தொகை. ரூ. |
|---|---|
| 2 டன் அல்லது அதற்கு அதிகமாய்க் கொண்டுபோகக்கூடியபடி செய்யப்பட்டு, உலோகக் கட்டுள்ள மோடார் அல்லது நீராவி வண்டி ஒன்றுக்கு ... ... ... ... ... ... | 200 |
| ஒவ்வொரு ட்ரெய்லர் வண்டிக்கும் (பின்னே சேர்க்கப்படும் வண்டிக்கும்) உடன் சேர்க்கையான கட்டணம் ... ... ... ... | 100 |
| 2 டன் அல்லது அதற்கு அதிகமாய்க் கொண்டுபோகக்கூடியபடி செய்யப்பட்டு, குஷன் அல்லது கெட்டியான ரப்பர் கட்டுள்ள மோடார் அல்லது நீராவி வண்டி ஒன்றுக்கு ... ... ... | 100 |
| 2 டன் அல்லது அதற்கு அதிகமாய்க் கொண்டுபோகக்கூடியபடி செய்யப்பட்டு, ந்யூமாடிக் டைர் என்னும் காற்றை உள்ளே விட்டு அடைத்திருக்கும் (ரப்பர்) கட்டுள்ள மோடார் அல்லது நீராவி வண்டி ஒன்றுக்கு ... ... ... ... ... | 75 |
| குஷன் அல்லது கெட்டியான ரப்பர் கட்டுள்ள ஒவ்வொரு ட்ரெய்லர் வண்டிக்கும் உடன்சேர்க்கையான கட்டணம் ... ... ... | 75 |
| ந்யூமாடிக் டைர் போட்டுள்ள ஒவ்வொரு டரெய்லர் வண்டிக்கும் உடன் சேர்க்கையான கட்டணம் ... ... ... ... | 50 |
| ஒரு டன் அல்லது இரண்டு டன்னுக்குக் குறைவாகக் கொண்டுபோகக்கூடியபடி செய்யப்பட்ட மோடார் அல்லது நீராவி வண்டி ஒன்றுக்கு ... ... ... ... ... ... | 75 |
| ட்ராம் வண்டி ஒன்றுக்கு ... ... ... ... ... | 50 |
| 15 அல்லது அதற்கதிகமான நபர்களை ஏற்றிக்கொண்டு போகக்கூடியபடி செய்யப்பட்ட மோடார் பஸ் என்னும் வண்டி அல்லது ஷார்ராபான் என்னும் மேல் மூடியில்லாத மோடார் வண்டி ஒன்றுக்கு ... | 200 |
| 15 நபர்களுக்குக் குறைவாயும் 7 நபர்களுக்கு மேற்பட்டும் ஏற்றிக்கொண்டு போகக்கூடியபடி செய்யப்பட்ட மோடார் பஸ் அல்லது ஷாராபான் என்னும் வண்டி ஒன்றுக்கு ... ... ... | 150 |
| 7 நபர்களுக்கு மேற்படாமலும் 3 நபர்களுக்கு மேற்பட்டும் ஏற்றிக்கொண்டு போகக்கூடியபடி செய்து வாடகைக்கு ஓட்டப்படும் நாலு சக்கர மோடார் வண்டி ஒன்றுக்கு... ... ... ... | 75 |
| 7 நபர்களுக்கு மேற்படாமலும் 3 நபர்களுக்கு மேற்பட்டும் ஏற்றிக்கொண்டுபோகக்கூடியபடி செய்து வாடகைக்கு ஓட்டப்படாத நாலு சக்கர மோடார் வண்டி ஒன்றுக்கு... ... ... ... | 35 |
| 3 அல்லது அதற்குக் குறைவான நபர்களை ஏற்றிக்கொண்டு போகக்கூடியபடி செய்யப்பட்ட நாலு சக்கர மோடார் வண்டி ஒன்றுக்கு ... | 25 |

| | அரை வருஷத் தவணைத் தொகை. ரூ. |
|---|---|
| மோடார் ட்ரைஸிகில் வண்டி ஒன்றுக்கும், பக்க வண்டியுடன்கூடிய அல்லது பக்க வண்டியில்லாத மோடார் பைஸிகில் வண்டி ஒன்றுக்கும் ... ... ... ... ... ... | 15 |
| ஒன்று அல்லது பல பிராணிகளால் இழுக்கக்கூடியபடி செய்யப்பட்ட நாலு சக்கர வண்டி ஒன்றுக்கு ... ... ... ... | 10 |
| ஒன்று அல்லது பல பிராணிகளால் இழுக்கக்கூடியபடி செய்யப்பட்ட இரண்டு சக்கர வண்டி ஒன்றுக்கு ... ... ... ... | 5 |
| வேறே பைஸிகில் அல்லது ட்ரைஸிகில் வண்டி ஒன்றுக்கு ... ... | 2 |
| குழந்தையின் (பெரம்புலேட்டர்) தள்ளு வண்டி அல்லது நடை வண்டியல்லாத வேறே வண்டி ஒன்றுக்கு ... ... ... | 3 |
| யானை ஒன்றுக்கு ... ... ... ... ... ... | 12 |
| ஒட்டகம் ஒன்றுக்கு ... ... ... ... ... | 6 |
| நாலடிக்குக் குறைவாயிராத குதிரை அல்லது கோவேறு கழுதை ஒன்றுக்கு ... ... ... ... ... ... | 6 |
| நாலடிக்குக் குறைந்த குதிரை அல்லது கோவேறு கழுதை ஒன்றுக்கு ... | 2 |
| ரிஷபம், எருது, எருமைக்கடா, கழுதை அல்லது நாய் ஒன்றுக்கு ... | 1 |

5-வது ஷெட்யூலின் 1-ம் பாகத்தைச் சேர்ந்த 5-வது விதியிற்கண்ட (b) குறிப்பிட்ட பகுதியில் திருத்தம்.

4. (1) பிரதான ஆக்ட் 5-வது ஷெட்யூலின் 1-ம் பாகத்தைச் சேர்ந்த 5-வது விதியிற்கண்ட (b) குறிப்பிட்ட பகுதியின் கடைசியில் அடியிற்கண்ட வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் :—

“ மியுனிஸிபல் கீழுத்தியோகஸ்தர்களுக்கு விற்பனை செய்வதற்காக சாமக்கிரிகளையும் அவசியமாயுள்ள இதர சாமான்களையும் வாங்குவது.”

“ விவரணம்.—இந்த விதியின் காரியத்துக்காக, ‘சம்பளம்’ என்பதில், நகர்விசாரணைச் சங்கத்தார் அப்போதைக்கப்போது நிஷ்கரிஷை செய்யக்கூடிய விலைகளின்படி நகர் விசாரணைச் சங்கத்தாரிடத்திலிருந்து சாமான்களைக் கிரயத்துக்குக் கொண்டு, சம்பளம் முழுவதுக்குமோ அல்லது அதன் ஒரு பாகத்துக்கோ பர்த்தியாக சாமான் ரூபமாய் தொகைகள் பெற்றுக்கொள்வதற்கான உரிமை எதாகிலும் நகர் விசாரணைச் சங்கத்தாரால் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த உரிமை என்பதும் அடங்கும்.”

(2) பிரதான ஆக்ட் 5-வது ஷெட்யூலின் 1-ம் பாகத்தைச் சேர்ந்த 10-வது விதியின் கடைசியில் அடியிற்கண்ட வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

“ அல்லது விசேஷத்தன்மையுள்ள வேறே எந்த் செலவுகளையாகிலும் செய்யலாம்.”

ஆர். ராமசந்திர ராவ்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மெண்ட்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.